தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுவதில் அதிக செலவு வந்தாலும், நஷ்டம் வந்தாலும் ஆரமபிக்கப்படுகிறபோது, விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுக்கிறபோது செலவு அதிகம் என்று கைவிடுவது சரியா? அந்தக் கொள்கையை இந்த அரசும் கடைப்பிடிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும் அரசினுடைய கொள்கை எப்படிப்பட்டது என்று. அதிகம் செலவாகிறது என்பதை மாத்திரம் கணக்கில் கொண்டு நாம் திட்டங்களைத் தீட்டுவது இல்லை. அந்தத் திட்டங்களின் மூலம் எத்தனை ஏக்கர்கள் பாசன வாய்ப்புகள் பெற முடியும் என்ற அடிப்படையை மையமாக வைத்துத்தான் திட்டங்களைத் தீட்டுகிருேம். இந்த அரசைப் பொறுத்தவரையில் செலவு அதிகமானலும் எவ்வளவுதூரம் மக்களுக்கு அந்தத் திட்டம் பயன்படும் என்ற அடிப்படையில் அந்தத் திட்டங்களைப் பரிசீலித்து வருகிறது. அந்த முறையில்தான் இந்த வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுவது சரியல்ல என்ற எண்ணத்தில் கைவிட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோட்டில் பால் உற்பத்தி—சுத்திகரிப்பு ஆலை

*வினு எண் 56—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோட்டில் பால் உற்பத்தி—சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) இவ் வினுவிற்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பால் உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு ஆலை ஆரம்பிப்பது பற்றிய செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனல்,

அத்தகைய நிலையங்களை உருவாக்க வேண்டும் என்று அங்கே உள்ளவர்கள் பெரிதும் விரும்புகிற காரணத்தால் அந்த நிலையங்களை ஏற்படுத்த அரசு இனியாகிலும் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, பாலே தூய்மையாக இருப்பதால் சுத்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் 'இல்லை' என்று பதில் சொன்னேன். அரசாணை எண் 1655, வேளாண்மைத் துறை, நாள் 29—9—1977-ல் அரசு ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் யூனியன் மூலமாக ஈரோட்டில் ஒரு தன்னிறைவு பால் பண்ணை, இரண்டு குளிர் பதன நிலையங்கள், மற்றும் ஒரு கால்நடை தீவனம் தயாரிப்பு நிலையமும் அமைப்பதற்காக ரூ. 3.30 கோடி செலவினத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்தாவிட்டாலும் பாலை பதப்படுத்த தொழிற்சாலை துவங்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது, ஆந்திர மாநில டெய்ரி டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாக 'விஜெய் ஸ்ப்ரே' என்ற குழந்தை உணவு உற்பத்தி செய்யப்பட்டு அது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. அதே போன்று நம்முடைய அரசின் சார்பில் ஒரு குழந்தை உணவை 'ஸ்ப்ரே'யைத் தயாரிக்க ஏதேனும் செயற் குறிப்பு உண்டா, உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, பால் வளம் இரண்டாவது பெருக்கத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட இருக்கும் தொழிற்சாலைகளில் சில தொழிற்சாலைகளில் குழந்தைகள் பால் உணவு தயாரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. எனவே, விரைவில் குழந்தைகள் பால் உணவு 'ஆவின்' என்ற பெயரிலோ அல்லது வேறு ஏதாவது ஒரு பெயரிலோ நிச்சயமாக வெளிவரும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

1978 செப்டம்பர் 2]

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு தமிழ் நாட்டில் பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் உண்டா? அது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பால் வளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு அதில் பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்கவும், அதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அத்திட்டங்களை அவர்கள் ஒப்புக் கொண்ட பிறகு அவற்றைச் செயல்படுத்த அரசு தீவிர கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் தலைவரவர்களே, பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு தென் மாவட்டமான நெல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பாலைப் பதப்படுத்தும் நிலையம் ஆரம்பிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின்கீழ், ஆறுவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவிற்குள் தமிழ் நாட்டில் 150 இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க உத்தேசம் இருக்கிறது. அப்போது தென் மாவட்டங்களின் பிரச்னை கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பால்வள நிறுவனங்கள்

* வினா எண் 57—திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் பால் வள நிறுவனங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் நிறுவனங்கள் அமைக்கும் நோக்கம் உள்ளதா?